# ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

IWWRMP

## ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

# திட்ட முகாமைத்துவ பிரிவு

**(Credit. No. IDA-6621-LK)**

## Alkali-Aggregate Reaction, அணையின் பாதுகாப்பில் அதன் தாக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு நடவடிக்கைகளை முன்மொழிவதற்கு விக்டோரியா அணையின் நிலைத்தன்மை பகுப்பாய்வுக்கான (பின் பகுப்பாய்வு) ஆலோசனை சேவை

**ஒப்பந்த இலக்கம்: LK-MoMDE-433807-CS-QCBS**

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை அரசாங்கத்திற்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு ஆலோசனை சேவைகளுக்கான நடைமுறைகளுக்கு இதன் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இந்த ஆலோசனை சேவையின் நோக்கம், விக்டோரியா அணையின் கட்டமைப்பு ஒருமைப்பாட்டின் அளவை மதிப்பிடுவது, Alkali–Aggregate Reaction (AAR) விளைவுகள் மற்றும் எந்தவொரு கட்டமைப்பு சிதைவின் மற்ற சாத்தியமான காரணங்களையும் ஆய்வு செய்வது, மற்றும் ARR அல்லது அணை பாதுகாப்பில் வேறு ஏதேனும் சாத்தியமான காரணங்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் அணையின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் பொருத்தமான தீர்வு நடவடிக்கைகளை முன்மொழிவதாகும். ஒப்படையின் எதிர்பார்க்கப்படும் காலம் 2026 ஏப்ரலில் ஆரம்பித்து பத்து (10) மாதங்களாகும். இந்த சேவைகளின் மேலதிக விபரங்கள் குறிப்பு விதிமுறைகளில் (TOR) விபரிக்கப்பட்டுள்ளது.
3. ஒப்படையின் மேலதிக விபரங்கள் குறிப்பு விதிமுறைகளில் (TOR) விபரிக்கப்பட்டிருப்பதோடு அது https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற முகவரியில் கிடைக்கப்பெறும்.
4. தற்போதுள்ள வடிவமைப்பு ஆவணங்களை மீளாய்தல், நிறைவு செய்யப்பட்ட பணிவரைபடங்கள், கண்காணிப்பு தரவு மற்றும் விக்டோரியா அணை தொடர்பான முந்தைய ஆய்வுகள், கொங்கிறீற் சோதனை நடத்தல், மாதிரி எடுத்தல் மற்றும் ஏதேனும் Alkali–Aggregate Reaction (AAR) அல்லது அது தொடர்பான நிகழ்தன்மைகள், அணையின் three-dimensional Finite Element Analysis (FEA) வடிவம் ஒன்றை மேம்படுத்தல் மற்றும் பின் பகுப்பாய்வு செய்வதற்கான அடித்தளம் மற்றும் பல்வேறு சுமை மற்றும் நீர்த்தேக்க நிலைமைகளின் கீழ் நிலைத்தன்மை மதிப்பீடு, விரிவான நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பு பகுப்பாய்வு அறிக்கை ஒன்றை தயாரித்தல் (முக்கியமான நிலைமைகளை அடையாளம் காணுதல், உருவகப்படுத்துதல் முடிவுகள் மற்றும் கண்காணிப்பு தரவுகளுக்கு எதிரான சரிபார்ப்பு ஆகியவை அடங்கும்), தீர்வு நடவடிக்கைகளை முன்மொழிதல் மற்றும் முன்னுரிமை அளித்தல் மற்றும்/ அல்லது செலவு மதிப்பீடுகளுடன் கூடுதல் கண்காணிப்பு மற்றும் சோதனைத் தேவைகள், மற்றும் செயல்பாடு மற்றும் விளக்கக் கையேட்டுடன் ஒரு உருவகப்படுத்துதல் மாதிரியை வழங்குதல், அதே நேரத்தில் வாடிக்கையாளரின் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகியவை ஆலோசனை சேவைகளில் உள்ளடங்கும்.
5. தகுதி பெற்ற ஆலோசகர்கள் (நிறுவனங்கள்) நிரூபிக்கப்பட்ட தொடர்புடைய அனுபவம் அல்லது இதனையொத்த அனுபவத்துடன் சேவைகளை வழங்குவதில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு IWWRMP தற்போது அழைப்பு விடுக்கிறது.
6. அர்வமுடைய ஆலோசகர்கள் பின்வரும் குறுகியபட்டியலிடப்பட்ட அளவுகோலின்படி சேவைகளை மேற்கொள்வதற்கு தேவையான தகைமை மற்றும் தொடர்புடைய அனுபவத்தைப் பெற்றிருப்பதை நிரூபிக்கும் தகவல்களை (நிறுவன விபரம், உறுப்பினர் சபையின் தகைமைகள், பிரசுரங்கள் முதலியன) வழங்குதல் வேண்டும்.
   a) ஆலோசகர் AAR விசாரணை ஆய்வுகள் உட்பட அணை தொடர்பான பின் பகுப்பாய்வுகளில் நிரூபிக்கப்பட்ட இதனையொத்த அனுபவத்துடன் TOR இல் விபரிக்கப்பட்ட அனைத்து அம்சங்களிலும் விரிவான முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவு, போதுமான வளங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை அணுகுதல் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு கடந்த பத்து (10) ஆண்டுகளில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
   b) ஆலோசகர், கொங்கிறீற் சோதனை, புவி தொழில்நுட்ப விசாரணைகள் மற்றும் numerical modelling உள்ளிட்ட பலதுறை ஆய்வுகளை நிர்வகிக்கவும் செயல்படுத்தவும் வலுவான தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் திறனை வெளிப்படுத்தும், நிரூபிக்கப்பட்ட அனுபவம் மற்றும் இதனையொத்த ஆலோசனைப் பணிகளுக்கு பொருத்தமான நிபுணத்துவம் கொண்ட போதுமான எண்ணிக்கையிலான நிரந்தர முக்கிய ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆலோசகர் தற்போதைய பணிக்கு பொருத்தமான தகுதி வாய்ந்த நிபுணர்களை முன்மொழிதல் வேண்டும் என்பதோடு, அவர்களின் தகுதிகள், தொடர்புடைய அனுபவம் மற்றும் நிறுவனத்தில் பணியாற்றிய ஆண்டுகள் பற்றிய விபரங்களை வழங்குதல் வேண்டும், மேலும் முன்மொழியப்பட்ட ஊழியர்களிடையே பொருத்தமான திறன்கள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் (இந்த கட்டத்தில் சுயவிபரக் கோவைகள் தேவையில்லை).
   c) ஆலோகர் கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்காக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதன் மூலம் சிறந்த நிதி ஸ்திரத்தன்மை மற்றும் திறனை நிரூபித்தல் வேண்டும். (ஆலோசகரின் வேலை மூலதனம் சாதகமாக இருத்தல் வேண்டும்)
   d) மற்ற வளங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பம் முதலியவற்றின் கிடைக்கும் தன்மை.
7. ஆலோசகர் தமது தகைமையை மேம்படுத்துவதற்கு மற்ற நிறுவனங்களுடன் கூட்டிணையலாம் என்றபோதும் அந்தக் கூட்டிணைவு கூட்டு முயற்சி ஒன்று மற்றும்/ அல்லது உப ஆலோசனை நிறுவனம் ஒன்றா என்பது பற்றி தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். கூட்டு முயற்சி ஒன்றாயின், தேர்வு செய்யப்படும் பட்சத்தில் ஒட்டுமொத்த ஒப்பந்தத்திற்காகவும் கூட்டு முயற்சியில் உள்ள அனைத்து கூட்டாண்மையாளர்களும் கூட்டாக மற்றும் தனித்தனியாக பொறுப்புக் கூற வேண்டும். ஒரு நிறுவனம்/ அமைப்பானது, ஏக ஆலோசகர், கூட்டு முயற்சி கூட்டாண்மையாளர் அல்லது உப ஆலோசகர் ஒருவராக ஒரு முன்மொழிவுக்கு மாத்திரம் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படும் என்பதை கருத்தில்கொள்ளவும்.
8. ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனத்திற்கு, உலக வங்கியின் ஆர்வ முரண் தொடர்பான கொள்கையை, உலக வங்கியின் IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகளின் 2016 ஜுலை, 2017 நவம்பர் மற்றும் 2018 ஒகஸ்டில் திருத்தப்பட்ட பிரிவு III, பந்திகள் 3.14, 3.16 மற்றும் 3.17 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை நிர்ணயிக்கிறது.
9. 2016 ஜுலை திகதிய, 2017 நவம்பர் மற்றும் 2018 ஒகஸ்டில் திருத்தப்பட்ட IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகளின், உலக வங்கியின் வழிகாட்டல்களில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய தரம் மற்றும் செலவு அடிப்படை (QCBS) தேர்வு முறையை பின்பற்றுவதன் மூலம் ஆலோசகர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்.
10. ஆர்வமுடைய ஆலாசகர் வேலை நாட்களில் மாத்திரம் மின்னஞ்சல்: iwwrmp@sltnet.lk (+94 112691163) 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை அலுவலக நேரங்களில் முகவரியில் சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) மேலதிக விபரங்களை பெறலாம்.
11. ஆர்வ வெளிப்பாட்டை 2025 டிசம்பர் 30 ஆம் திகதி 14:00 மணிக்கு (உள்ளூர் நேரம்) கீழ் தரப்பட்ட முகவரிக்கு இரு பிரதிகளுடன் எழுத்து வடிவம் மற்றும் அதன் மென் வடிவம் (portable drive(USB), DVD, CD முதலியன) ஒன்றில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**திட்ட முகாமைத்துவ பிரிவு,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்**
**2 ஆவது மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு - 07, இலங்கை.**

**தொலைபேசி: +94-112691163**
**2025 நவம்பர் 26 அன்று**